**இருபத்தியோராம் நூற்றாண்டிற்கான உயர் கல்விச் செயற்றிட்டம் - 2016 சனவரி 01 தொடக்கம் ஒக்தோபர் 25 வரை**

இருபத்தியோராம் நூற்றாண்டிற்கான உயர் கல்விச் செயற்றிட்டத்தின் 2016 சனவரி 01 தொடக்கம் 2016 ஒக்தோபர் 25 வரையிலான காலப்பகுதிக்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2010 ஆகஸ்ட் 26 ஆந் திகதிய 4686–எல்கே ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் 2 பீ (3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

### 1.2 செயற்றிட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்றிட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னைய உயர் கல்வி அமைச்சாகவிருந்த தற்போதைய உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு செயற்றிட்டத்தின் அமுலாக்கல் முகவராகும். சமத்துவமான சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்தி தேவைகள் வரிசையில் தரமான உயர் கல்விச் சேவைகளை வழங்குவதற்கு பெறுநர்களின் உயர் கல்வி முறைமை, நிறுவனங்கள் மற்றும் மனித வளங்களின் இயலுமையை முன்னேற்றுதல் செயற்றிட்டத்தின் குறிக்கோளாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்றிட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 4,930 மில்லியனிற்கு சமனான ஐ.அ.டொலர் 40 மில்லியனாக உள்ளதுடன் மொத்த கிரயமும் சர்வதேச அபிவிருத்தி சங்கத்தினால் நிதியளிப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. செயற்றிட்டம் அதன் நடவடிக்கைகளை 2010 நவம்பர் 01 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2015 திசெம்பர் 31 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. பின்னர் செயற்றிட்டக் காலப்பகுதி 2016 ஒக்தோபர் 25 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்றிட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்றிட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது
அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல்

என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) விசேட (டொலர்) கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் மற்றும் அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன் 2016 ஒக்தோபர் 25 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்ததா என்பதும்,

(உ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(ஊ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(எ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்

(ஏ) நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஒ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1. அபிப்பிராயம்

இது வரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும்,

(அ) செயற்திட்டமானது 2016 ஒக்தோபர் 25 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க 2016 ஒக்தோபர் 25 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) விசேட (டொலர்) கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் மற்றும் அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தன என்பதுடன் 2016 ஒக்தோபர் 25 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தது என்றும்,

(ஈ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கு இணங்க, மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவையாக, சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடிந்திருந்தது என்றும்,

(உ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

(ஊ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதி உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதிகளின் நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போது மற்றும் 2016 ஒக்தோபர் 25 வரையான நிதிகளின் பயன்பாடு தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| மூலம் | கடன் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்திய நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டு காலப்பகுதியின் போது | | 2016 ஒக்தோபர் 25 வரை | |
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஐடிஏ | 40.00 | 4,930.06 | 600.00 | 3.90 | 517.70 | 36.90 | 4,830.53 |
| **மொத்தம்** | **40.00** | **4,930.06** | **600.00** | **3.90** | **517.70** | **36.90** | **4,830.53** |

மேற்குறிப்பிட்ட தகவல்களின் பிரகாரம், ரூபா 4930.06 மில்லியனுக்கு சமனான ஐ.அ.டொலர் 40 மில்லியன் மொத்த ஒதுக்கீட்டில் ரூபா 4830.53 மில்லியனுக்கு சமனான ஐ.அ.டொலர் 36.90 மில்லியன் செயற்திட்ட காலப்பகுதியின் இறுதியில் பயன்படுத்தப்பட்டிருந்தது.

**3.2 பௌதீக முன்னேற்றம்**

--------------------------------

உயர்கல்வித் துறைக்கான விதிமுறைகளை நிறுவனமயப்படுத்தல், கற்பித்தல் மற்றும் கற்றலின் பொருத்தமான தன்மை மற்றும் தரத்தினை மேம்படுத்தல், மாற்று உயர்கல்வியை விரிவாக்கி மற்றும் பலப்படுத்தல், மற்றும் மனிதவள அபிவிருத்தி, கண்காணித்தல், மதிப்பாய்வு செய்தல், கற்கைகள், ஒருங்கிணைத்தல் மற்றும் தொடர்பாடல் போன்ற பெயரிடப்பட்ட 04 கூறுகளின் கீழ் செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் அமுலாக்கப்பட்டிருந்தது. செயற்திட்ட காலப்பகுதியின் இறுதியில் செயற்திட்ட நடவடிக்கைகளை அமுல்படுத்தலின் செயன்முறை மீது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உயர் கல்வித்துறைக்கான விதிமுறைகளை நிறுவனப்படுத்தலின் கூறின் கீழுள்ள தேசிய தகைமையுள்ள கட்டமைப்பு மற்றும் தர உறுதிப்பாட்டு முறைமை உயர் கல்வித்துறையிலுள்ள நிறுவனங்களிற்கிடையில் அபிவிருத்தி செய்யப்பட்டு தொடர்பாடல் செய்யப்பட்டிருந்த போதிலும், அதனுள் உள்ளடக்கப்பட்டிருந்த முன்மொழிவுகள் உரிய தரப்பினர்களால் வழமையாக அமுல்படுத்தப்பட்டிருந்தது என்பதை உறுதிசெய்வதற்கு எந்தவித பொறிமுறைகளும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தெஹிவளையிலுள்ள இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவனத்திலுள்ள தர அபிவிருத்தி மற்றும் தலைமைத்துவ நிலையத்திற்கான கட்டிடத்தின் நிர்மாண வேலைகள் 2016 மே அளவில் ரூபா 80 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயததில் பூர்த்தி செய்வதற்கு பட்டியலிடப்பட்டிருந்தது. எனினும், நிர்மாண வேலைகளின் 60 சதவீதம் மாத்திரம் 2016 யூன் 30 அளவில் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் அத்திகதியில் ரூபா 61 மில்லியன் தொகை பயன்படுத்தப்படமுடிந்திருந்தது.

(இ) இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவனங்கள் மற்றும் 15 தேசிய பல்கலைக்கழகங்களின் கல்வி சார் மற்றும் கல்வி சாரா பதவியணியினரின் 240 அங்கத்தவர்களின் முனைவர் மற்றும் பட்டப்பின் படிப்புகளை பூர்த்திசெய்வதற்கு ரூபா 366.86 மில்லியன் தொகை வழங்கப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும் 30 பதவியணி உறுப்பினர்கள் செயற்திட்ட காலப்பகுதியின் இறுதியிலுள்ள அவர்களுடைய கற்கைகளை பூர்த்தி செய்யப்படவில்லை என அவதானிக்கப்பட்டது.

(ஈ) பட்டதாரிகளிற்காக 2011 இலிருந்து 2015 வரை செயற்திட்டத்தால் நடாத்தப்பட்ட ஆங்கில மொழி மற்றும் தகவல் தொழில்நுட்பத்தின் கற்கை நிகழ்ச்சித்திட்டங்கள் மீளாய்வாண்டின் போது தொடரப்பட்டிருக்கவில்லை. மீளாய்வு காலப்பகுதியின் போது நடாத்தப்பட்ட கற்கை நிகழ்ச்சித்திட்டங்களிற்காக ரூபா 509 மில்லியன் தொகையை செயற்திட்டம் செலவழித்திருந்தது.

(உ) சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் பிரயோக விஞ்ஞான பீடத்திலுள்ள வெளிசாரி பயிற்சி நிலையத்தை ஸ்தாபிப்பதற்கு செயற்திட்டம் நடவடிக்கை எடுத்திருந்தது. அந்த நோக்கத்திற்காக 2016 மார்ச் 29 இல் ரூபா 2.4 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட தளபாடம் பாதுகாப்பு பெட்டிகள் போன்ற உருப்படிகள் பயிற்சி நிலையத்தை ஸ்தாபிப்பதற்கு பல்கலைக்கழகமானது உரிய இடத்தை ஒதுக்கீடு செய்யாமையால் 2017 ஏப்ரல் 30 இல் உள்ளவாறு பாதுகாப்பற்ற முறையில் விளைவற்றிருந்தது என அவதானிக்கப்பட்டது.

(ஊ) சப்ரகமுவ பல்கலைக்கழகத்திலுள்ள சுற்றுலா விடுதியின் புதுப்பித்தல் மற்றும் விரிவாக்கலிற்காக செயற்திட்டத்தால் ரூபா 5.69 மில்லியன் தொகை செலவழிக்கப்பட்டிருந்தது. எனினும் நிர்மாண வேலைகள் சரியான முறையில் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் கதவுகள், கம்புகள் மற்றும் காற்றுப் பதனாக்கி கருவிகள் முறையாக பொருத்தப்பட்டிருக்கவில்லையெனவும் 2017 ஏப்ரல் 17 இல் மேற்கொள்ளப்பட்ட களப்பரிசோதனையில் அவதானிக்கப்பட்டது.

**3.3 செயற்திட்ட நடவடிக்கைகளை முடிவுறுத்துதல்**

---

செயற்திட்ட நடவடிக்கைகள் 2016 ஒக்தோபர் 25 இல் முடிவுறுத்தப்பட்டிருந்த போதிலும் செயற்திட்டத்தால் கொள்வனவு செய்யப்பட்ட ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களை நிறைவேற்றல் மற்றும் அமுல்படுத்தல் முகவர்களுக்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. மேலும், செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவர் பேரேட்டு கணக்குகளை மூடுவதற்கும் அதற்கிணங்க நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்குமாக செயற்திட்ட கண்காணிப்பு பிரிவை அறிவுறுத்துவதற்காக செயற்திட்டம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.